



ஓலை 187| ஓசை 310| ஆகஸ்ட் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிஞர் அமுதபாரதி

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.**

## பொருள்

**பணிவும் இனிமையான பேச்சும் ஒருவருக்கு உண்மையான அணிகலன்கள்; மற்ற அணிகலன்கள் அதற்கு இணையாகாது**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**

**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## தொன்மைத்தமிழ்த் தேடல்!

பாவகை : எண்சீர் மண்டிலம்

இவ்வுலகை ஆண்டயினம் தமிழர் நாமும்
இழிநிலையில் தேடலின்றி மாள லாமா?
இவ்வுலகை நாமுமினி ஆள வேண்டி,
இக்கணமே புவிப்புரட்ட வழியும் காண
எவ்வளவோ இடையூறு வந்த போதும்
எதிர்த்திடவே தேடிடுவோம் எளிய வேட்கை;
அவ்வுலகு வெண்ணிலவு செவ்வாய்க் கோளில்
அருந்தமிழை நிலைநிறுத்தத் தேடு வோமே!




தேடலுக்குள் தேடல்கள் நாளும் வேண்டும்;
தேடியேதாம் தமிழருமை சூடு மேற்றி,
ஓடவைக்க அயல்மொழியின் ஆளு மைகள்,
ஒன்றிணைந்து பாடையேற்றத் தேடல் வேண்டும்;
நாடகன்று திரிகின்ற தமிழர் நாமும்
நற்றமிழ ஈழத்தை மலர்த்த வேண்டிப்
பாடுபட நல்வழியைத் தேட வேண்டும்;
பைந்தமிழா தேடலேதான் விடிய லாகும்!




தொல்தமிழர் தொன்மைகளைத் தரையில் எங்கும்
தோண்டிடுவோம் தேடியேதான்; நம்மி னத்தின்
பல்நூறு ஆண்டுகளின் பழமை தம்மை
பாரினிலே படையலாக்கத் தேடு வோமே!
கல்வெட்டு, நடுகல்கள், கருவி யாவும்
கனித்தமிழர் வரலாற்றின் அத்து ணையும்
எல்லையற்றப் பட்டியலைத் தேடு வோமே!
இருமாப்புக் கொண்டேதான் நிமிர்ந்து நிற்போம்

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# கவனம்

பாவகை : எண்சீர் விருத்தம்.

விளம்+காய்+விளம்+காய்

எண்ணிய இலக்கினையே
ஏற்றமாய்ச் செயலாக்க
கண்படை தவிர்க்காமல்
கவனமாய் இருந்திடுவாய்.

உண்டியை மறக்காதே
உண்மடம் விலக்கிடுவாய்.
உண்மையாய் நடந்திட்டால்
உச்சிதம் அடைந்திடுவாய்.

எண்ணமே உயர்வானால்
எட்டலாம் சிகரத்தை.
எண்பதம் நிறைத்திட்டால்
எய்த்தலை விரட்டிடலாம்.

தண்பதம் வந்திட்டால்
தத்தரம் விலக்கிடுவாய்
தண்ணளி உறவிடமே
தஞ்சமும் அடையாதே.



கவிஞர் செ. கலைவாணி

இன்னிசை ஈந்த இசைத்தமிழே எத்திசையும்
உன்னிசையே மூச்சாம் உயிர்க்கு

உயர்வு பெறவே உருவெடுத்த அன்னை
அயர்வில் உறங்கல் அரிது

சங்கத்தில் ஆட்சியேற்று சாகா வரம்பெற்றாள்
பொங்கும் சிறப்பின் பொருட்டு

அழகியல் கொண்டும் அகங்கார மில்லை
பழகின் உணரார் பசி


புகழோங்கும் தேன்தமிழ் புத்தொளி ஓங்கும்
அகம்நிற்ப நம்சால் அறம்




கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

# இருந்தும் இல்லாமலும்

நானவனைப் பார்த்தபோது
அங்கு முழுதாய் இருந்தான்.
அவனைப் பார்த்தபடியேதான்
நானிந்த கவிதையை
எழுதிக் கொண்டிருக்கிறேன்.
அதற்கு சாட்சியாய்
நீங்களும் இருந்து கொண்டிருக்கிறீர்கள்.
ஒவ்வொரு
வார்த்தைகளுக்குள்ளும் வரிகளுக்குள்ளும்
லாவகமாய்
நுழைந்து கொண்டிருக்கிறானவன்.
என் கவிதையில்
பிடிப்புடனும் பற்றுதலுடனும்
நுழைந்து கொள்ளும்
அவனிடமும் சாட்சியரான உங்களிடமும்
கவிதை நிறைவுற்றதும்
அதை சொல்ல நினைக்கிறேன்.
கவிதையின் நிறைவில்
அவனந்த வெளியில் இல்லாதிருக்கிறான்.
கவிதையில் அவன் மட்டுமே
முழுமையாய் இருந்து கொண்டிருக்க
கவிதையெழுதிய நானும்
சாட்சியரான நீங்களும்
அவனைப்போலவே
அந்த வெளியில் இல்லாதிருக்கிறோம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

சாதிகள் சவரம் செய்யப்பட்ட
அழகான முகமாய்
புதிய இந்தியா!

மதங்களின் உடலில் மரணத்தின்
சிகிச்சை செய்யும்
புதிய இந்தியா!

நிர்வாணம் இனி இல்லை;
உறுதிமொழியுடன்
புதிய இந்தியா!



போதையின் மொழிகளை
இனி ஊமையாக்கும்
புதிய இந்தியா!

கரைவேட்டிகளைத் துவைத்து,
அரசியல் கறைகள் போக்கும்
புதிய இந்தியா!

ஊழலை ஒழிக்க மகாத்மாக்களை
நாள்தோறும் உருவாக்கும்
புதிய இந்தியா!

ஐயோ! உறக்கம் கலைந்தது;
கனவு தொலைந்தது
தேசியக் கொடியுடன்.

மீண்டும் ஒரு
ஆகஸ்ட் மாதம்,
தேசிய கீதத்துடன்.

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# விடியலின் ராகம்

அதிகாலைப் பொழுது
அழகாய் விடிந்தது.
பனித்துளி புல்லில்
மெதுவாய் விழுந்தது.

கதிரவன் ஒளியில்
உலகம் விழித்தது.
பறவைகள் வானில்
சிறகை விரித்தன.

மலர்கள் தோட்டத்தில்
மென்மையாய் சிரித்தன.
வண்ணத்துப் பூச்சிகள்
தேனைச் சுவைத்தன.

இளந்தென்றல் காட்டில்
நனைய வீசியது.
இயற்கையின் அழகு
மனதை ஈர்த்தது.

வயல்வெளி எங்கும்
பச்சை படர்ந்தது.
குயிலின் கீதம்
காதில் ஒலித்தது.




ஆற்றின் நீர் மெல்ல
அசைந்து சென்றது.
மனதின் கவலைகள்
யாவும் மறந்தன.

புதியதோர் நம்பிக்கை
நெஞ்சில் பிறந்தது.
சுறுசுறுப்பு உடம்பில்
தானாய் வந்தது.

உழைப்பின் பெருமை
வாழ்வில் உயர்ந்தது.
வெற்றிக் கதவுகள்
நமக்காகத் திறந்தன.

நாளைய உலகம்
நம்மை அழைத்தது.
சாதனைச் சிகரம்
கைகளில் சேர்ந்தது.

அன்பின் ஒளியில்
உலகம் இணைந்தது.
அமைதி எங்கும்
நிறைவாய் அமைந்தது.

கவிஞர் கோ. கே. ஏழுமலை, நத்தமூர் (உளுந்தூர்பேட்டை)

# நிலையற்ற வாழ்க்கை

காலையில் எழுந்தவுடன், இந்த நாள்
நேற்றைவிட இன்று சிறப்பாக
அமையும் என்ற எதிர்பார்ப்பில், மகிழ்ச்சியுடன்
சுறுசுறுப்பாக வேலைகளைத் தொடங்கி,
சுட்டெரிக்கும் வெயிலிடமிருந்து
தன்னை காப்பாற்றி.

வினோதமான குரல் காற்றில் மிதந்து
வருகிற அந்த ஒலியைக் கண்டுபிடிக்க இயலாதவாறு,
அங்கு விலங்குகள் காணப்படும் என்ற எண்ணத்தில்,
முடிந்தவரை ஆயுதங்களைக்
கைப்பற்றி தயாராக இருக்க
வேண்டும் என்ற முன் எச்சரிக்கையுடன்
வாழ்ந்து வரும் இந்த
நிலையில், கதிரவன் மறைந்து
உறங்கலாம் என நினைத்து,
பயந்தே நாட்களைக் கழிக்கின்றனர்.



இந்தச் சூழலிலும் படித்து,
பட்டம் பெற்று, பட்டதாரியாக
வெளிப்படுகின்றனர்.

இதுவே மலைவாழ் மக்களின்
தற்போதைய நிலைமை.

கவிஞர் மா. மோனிஷா

சிறுமதிச் செறுநன் செருக்கு அறுத்து
செந்நிலம் செழிக்கச் செய்த அணங்கு
செந்நெல் வாணர் அகம் செழித்திட
பொழிந்தாள் மழையாகி நின்றாள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# ஐயம் புகினும் செய்வன செய்!

வாழ்வின் உயர்வும்
வாழ்வாதார வீழ்வும்
வாழ்ந்தோரால் புரிந்த
வாசமுள்ள மலரன்றோ!?

ஏற்றத் தாழ்வின்
ஏறுமுகம் தாழ்ந்திடினும்
ஏழ்மையின் உதயங்கள்
ஏக்கங்களாயிடலாமே!?



கையறு நிலையிலும்
கையேந்தியே உண்டிடினும்
கைகால் திறனோடு
கைவைத்திடு உழைப்பினிலே.

செல்வம் மறைந்தாலும்
செல்லும் இடமெல்லாம்
செய்யும் செயல்களையே
செவ்வனே செய்திடுவேன்.

ஐம்புலன்களையும் இணைத்து
ஐயமின்றிச் செயலாற்றிடுவேன்.
ஐம்பொன் பெறாவிடினும்
ஐந்தொடியே வாழ்ந்திடலாமே!?

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# பிரியம் சுமந்த வெண்புறா!

இறுக்கமானவர்கள் இன்னமும்
இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அவரவர் இருக்கும்
அவரவர் மட்டுமே அறிய முடியும்;
பிறர்க்குக் காட்டும் வலிமை மட்டும்
இங்கு கைகூடினால்,
அநேகர் அல்லல்களும்,
அறுபட்ட அவஸ்தைகளும்
நொடிக்கு ஒரு முறை தூளாக்கி,
வாகை மலரை வாரிக் கொள்ளும் பாக்கியம்
வழமையாய் அல்லவா பூத்திருக்கும்?



முடிவின் முடிவை
முடித்திட முடியாமலும்,
மோகன யாத்திரையும்
முழுமை பெறாமலும்,
முந்தியும் பிந்தியும்
தந்தியாய்த் தவணை முறையில்
பிரியம் அஞ்சலாகையில்,
எங்கிருந்து பிறக்கும்
எமக்கான விடியல்?

பிடிக்க முடியாத தூரத்தில்
புதிதாய்ப் புலரும் பரிதியின் ரகசியத்தை
அறிய முடியாத அவதானிப்புடனே,
அனுதினமும் கடந்திடும்
இருளின் குணம்தான் உனக்கு!

விடாமல் கொட்டும் மழையிலும்
விலகாமல் தொடரும்
உன் துயரை என்ன செய்ய?

இறுக்கம் உடைப்பது இறுக்கட்டும்;
உன் இதழின் சுணக்கத்தை
முதலில் உடை!


பிறகு,
தயக்கத்தில் தள்ளாடும்
என் தனிமை கொன்றிட,
வழக்கமாய் வந்தமரட்டும்
உன் பிரியம் சுமந்து வரும் வெண்புறா!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# என் தேடலின் வாழும் நாயகன் நீயே

என் தேடலில் வாழும் உறவு;
இப்போ தேடுகின்றேன்
உன்னை கட்டியணைக்க!

உன்னோடு பல மணிநேரம் பேச,
கட்டியணைத்து முத்தம் தர,
சோகங்களைப் பகிர்ந்திட,
உயிரைக் கொடுத்தாய்;
உறவாய் நின்றாய்.



இன்று
உறவாய் அப்பா என அழைத்தாலும்,
அருகில் நீ இல்லை!

ஆனாலும்
உன்னோடு பேசிக் கொள்வேன்
மௌனமாய்!

உங்களுக்குப் பிடித்த காரியங்கள்,
பொருட்கள்
அனைத்தையும் அள்ளி அள்ளி
என்னோடு சேர்த்துக் கொள்வேன்!

உங்களைத் தவறவிட்ட நொடிப்பொழுதுகளை
நினைத்து வாழ்கிறேன்.
அந்த விநாடிகள் ஒவ்வொன்றும்தான்
என்னில் உங்களை நான் காண்கின்றேன்!

கவிஞர் திருமதி. ஜுவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# வெயிலோ வெயில்


வெளியே யார் வருவாரென்று
காத்துக் கொண்டிருக்கிறது
காலன்போல இந்த வெயில்.

வந்தவர் உடலெங்கும் வரி வரியாய்ச்
சூடு போடுகிறது;
அப்பப்பா என்று வாய் திறந்து
அலறி அரற்ற வைக்கிறது.

வீதி மணலெங்கும் கிடக்கின்றன
நெருப்புக் கங்குகள்;
விரைந்து நடந்தால்
மேலும் மேலும் விக்கலெடுக்கிறது.

மரங்களின் நிழல் கையிருப்பு
காணாமல் போகிறது;
மாலை எப்பொழுது வந்து
மகிழ்வூட்டுமென மரங்களின்
மனங்கள் குமுறுகின்றன.

மாடுகளும் கன்றுகளும்
மேய்ச்சலை மறந்துவிட்டுக்,
குளத்தைக் குத்தகைக்கு எடுத்து,
அங்கேயே தலைமட்டும் காட்டித்
தண்ணீரில் தவம் கிடக்கின்றன.



தீநுண்மிக் காலம் போல
தெருவெங்கும் மயான அமைதி;
வருபவர் ஓரிருவர்
மின்னலென மறைகிறார்கள்.

வெயில் பிசாசை ஓட்டும்
மழைச் சாமியாரை
வேண்டுகிறேன் நானும்.

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

# கடிகாரம்

பிறரின் உதவிக்கென பிரியாமல் இணைந்து
உறவுகள் பெருக்கிய உயர்வான வடிவமே
குறித்த நேரத்தில் குழுவினை எழுப்பி
நெறியை படுத்தும் நேர்மையின் குணமே

வழிகாட்டும் மீனாய் வசந்த ஒளியேற்றி
செழிப்பான வரமாய் சிந்தையைப் பெருக்குமே
பகலிலும் இரவிலும் படுக்காது இயங்கும்
சுகமாய் வாழ்ந்திடச் சுறுசுறுப்பாய் இயங்குபவனே

விதவித வடிவத்தில் வீட்டில் அலங்காரமாய்
இதமாய் அரங்கை இன்னிசையில் நிரப்புமே
துாளியில் ஆடிடும் துாங்காத குழந்தை
வெளியாகும் ஒலியில் வெதும்பி பின்துாங்குமே



வேலைக்குச் செல்பவர் வேண்டிய நேரத்தில்
காலையில் எழுப்பி கடிந்து எழுப்புவாரே
கிளம்பிய முதலாய் கணக்காய் வழிகாட்டி
களத்தில் இறக்கும் கண்ணிய நண்பனே

வழிகாட்டும் மீனாய் வசந்த ஒளியேற்றி
செழிப்பான வரமாய் சிந்தையைப் பெருக்குமே
பகலிலும் இரவிலும் படுக்காது இயங்கும்
சுகமாய் வாழ்ந்திட சுறுசுறுப்பாய் இயங்குபவனே

வழிகாட்டும் நண்பனாய் நட்புடன் பழகும்
நெறியான சாதனம் நெற்றியின் சுட்டியாகவே
சுகமான வாழ்வின் சுடரான உருவமாய்
இகத்தில் கிடைத்த இருப்பிடம் நீயே

கவலைகள் மறக்க கணக்கில்லா தொலைக்காட்சி
கவனமாய் அளிக்கும் கையடக்க நண்பனே
நோயுற்றோர் நேரத்திற்கு நோன்பாய் மருந்தை
தாமதிக்கா தந்திடும் தாரணியின் தங்கைதானே


மனிதன் நிம்மியாக தன்னிலை உயர
கனியாக கிடைத்த கருவியே நன்று
தினமும் பார்க்காமல் திரும்பாத உயிராய்
மனதும் நாடிடும் நட்பின் வேண்டுதலாய்

கவிஞர் பி, அன்பழகன், கடலூர்

# யாரடி நீ?

எழுதா மொழியோ?
கேட்கா கவியோ?
சொல்லாப் புதிரோ?
இடம்பெறா இலக்கணமோ?
கைசேராக் காற்றோ?
பதிலில்லாக் கேள்வியோ?

அது தீராத் தாகமே!
என் காதலி!



கவிஞர் நிவேதிதா. ஜெ, கோவில்பட்டி



உன் நினைவால்
சுகமான தலையணை
சோகத்தைத் தாங்கி நனைகிறது
என் விழிநீரால்.

பேசும் உன் குரல்
மறைந்து போனதேன்?

நான் பேசும் பேச்செல்லாம் கேட்க
உன் செவிகள் இல்லாததால்,
பேசா மடந்தையாகிப் போனேனே.

வீட்டில் உன் காலடித் தடம் எங்கே என்று
தேடிப் பார்க்கிறேன்.
தொலைத்துப் போனாய் என்னைவிட்டு.
தொலையவில்லை
நம் காதல் ஏற்படுத்திய நினைவுகள்.

சுகமான சுமைகள்
இப்போது சோகமான சுமைகளாகிப் போனதேன்?

விழிகள் மூடி
உணர்வால் அணைக்கிறேன்.
உள்ளத்தால் அழைக்கிறேன்.

என் வலிகளை மறைத்துக்கொண்டு
நடைப்பிணமாய் உலாவுகிறேன்,
என் பாதியின் பிரிவை எண்ணி.

உலகை விட்டு நீ பிரிந்தாலும்,
உளியால் அல்ல;
வரிகளால் செதுக்கி
மீண்டும் உனக்கு உயிர் கொடுப்பேன்,

என் வரிகளின் வாயிலாக.

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

# காதற்ற ஊசி கற்பித்த ஞானம்



காவிரிப்பூம்பட்டினம் புகழ்பாடும் பட்டினப்பாலை எனும் இலக்கியம்;
காவிரிப்பூம்பட்டினம் வாழ்ந்தவருள் புவிபோற்றும் ஞானியும் உண்டு;
அன்னவர் திருப்பெயராய் நாம் வழங்குவது பட்டினத்தார்;
அப்பெயரில் தமிழ்மண்ணில் மூவர் வாழ்ந்துள்ளனர் என்பதையும்,
அவர்கள் பத்து, பதினான்கு, பதினேழு நூற்றாண்டுகளில்
அகிலமதில் வாழ்ந்தனர் என்பதையும் அறிதல் வேண்டுமே!



நாமிங்கு போற்றுகின்ற பட்டினத்தார் பிற்காலத்தவர்;
நாடவர்க்குச் சோழநாடு வந்த நாடுபோற்ற வாழ்ந்த,
நாவாய்கள் பல ஓட்டி திரவியம் தேடிய பெரும் வணிகர்!
திருவெண்காடர் என்ற இயற்பெயர் பெற்ற இவர் துறவியாகி,
தென்னகத்தின் புத்தரென வாழ்ந்த கதை அறிந்தவருண்டாயினும்,
தீந்தமிழ்க் கவிஞன் அடியேன், அவர் புகழ் கவிவழிபாடிட ஆசையுற்றேன்!

ஈறுதிங்கள் தன்னைச் சுமந்து பெற்றவள் இறந்தபோது புலம்பி,
ஐம்பூதத்தில் ஒன்றான தீயைத் தாயுடல் எரிக்க வானையிட்டு,
அழுதுபுலம்பிய செய்கை துறவியாலும் துறக்க இயலாதது;
அன்னையின் மீதுகொண்ட அன்பு என்பதைக் தெற்றென உணர்த்தியதே!

பிள்ளையில்லை என ஏங்கி வேண்டியழுதவர்க்கு அங்குப் பிள்ளையாய்,
பிறப்பற்ற பெருமகன் ஈசனே பிள்ளையாய்க் கிடைக்கப்பெற்று,
பெருவணிகத்தைக் கன்னிவணிகமாய்ச் செய்துகாட்டி, ஓலையொன்றைப்
பெட்டியில்வைத்ததில், "காதற்ற ஊசி கடைக்கண் வாரா" என எழுதி வைத்து,
பெருமைகொண்ட வணிகனையெல்லாம் துறக்கச் செய்ததை என்னவென்று
பாடிடுவேன்? அதை எப்படியென்று பாடிடுவேன் அடியேன் என் தமிழிலே!

வடநாடு சென்றவர், உஜ்ஜெயினியை ஆண்ட அரசன் பத்திரகிரியை
வாழும் அந்த வாழ்வு பொய் வாழ்வென உணரச் செய்து, ஈசனை உணர்;
வாழ்வே மெய்யென அறியச் செய்து தன்னடியானாக்கியதோர் தரமான
வினையே எதுவும் புகழ்தந்த வினையே அவர்க்கென்பேன் அடியேன்!

அகிலம் போற்றிட வாழ்ந்திட்ட பட்டினத்தார் பரமசிவத்திடம்
அன்பு பாராட்டிய சிறுதொண்டர் நீலகண்டர், கண்ணப்பர்
ஆகியோர்போல் தன்னால் அன்பு காட்ட இயலவில்லை என ஏங்குவது
ஆகச்சிறந்த சிவபத்தியன்றோ? உரை செய்தால் மறுப்போர் இருப்பரோ இங்கு?

பட்டினத்தார் பாடல்


வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லன்; மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல்லேன் அல்லன்; தொண்டு செய்து
நாலாரில் கண்ணிடத்து அப்பவல்லேன் அல்லன்; நானினிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பனுக்கே!
-பட்டினத்தார்

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# விடியல் விரைவில்

வெற்றுப் பக்கங்கள் தொட்ட தூரிகைகள்,
வரைந்த வாழ்வின் அழுத்த வரைபடங்கள்,
வளைந்த கோடுகளைச் சரியாக்கும் முயற்சியில்
முழுமூச்சுடன் இறங்கினேன்; எழுதுகிறேன்.

கரடுமுரடுப் பாறைகளைச் சமமாக்க,
நான் விரல் சக்கரத்தை விரைவாக்கினேன்.
ஏமாற்றக் கண்மாய்கள் மூழ்கடித்த திறமைப் படகுகளை
திரும்ப எடுக்கவே பயிற்சி செய்கிறேன்.



எழுத்துக்கள் விதைகளை விதைக்க நாளும்,
எழுதுகோல் கலப்பையால் உழுகிறேன்.
சிலசமயம் இயலாமைச் சறுக்கலில் விழுகிறேன்.
"என்னால் முடியும்" அறிவிலிகளின் செய்கையால்,
இருட்டான மேகத்தைச் சரியாக்க இயலும்.

என் நகங்கள் சூடிய கிரீடங்களாய்,
எழுத்துக்கள் எனக்குள் இனி உயரே செல்ல,
படிக்கட்டுகளை அமைக்கும் பாதையைக் காட்டும்.
சமூகச் சிக்கலை மெல்ல அவிழ்த்து,
மேன்மை செய்யும் நன்மை கிடைக்கும்.

இளைப்பாறும் போதும், இமைக்கிற பொழுதும்,
இதய ஓசைகளை இசையாக்கி மகிழ்வோம்.
நமக்குள் ஒளிந்த ஒளிரும் சிற்பத்தை
எழுத்துகளால் தெளிவாக்க முயல்வோம்.

அடுக்களைப் பாத்திரம் நம்மால் கதாபாத்திரமாகும்.
ஆணவப் பகைவர் நம் நிலையால்
அன்பாக வருவர்; ஆதரவைத் தருவர்.
பருவநிலை மாறும்போது
மனநிலை மாறாதா என்ன?

நம்பிக்கை நூல்களில் கட்டும் காகிதப் பூக்கள்,
காலையில் சூரிய ஒளியில்
பளிச்சிடும் பூக்களாய் மாறும்.

நாளை விடியல் நம்மால் விடியும்!

கவிஞர் ரெஜினாபானு, மேலூர்

யாரையும் சார்ந்து வாழ்வதல்ல சுதந்திரம்,
யாருக்கும் அடிமையாகாதிருப்பதே சுதந்திரம்!

விழுந்தாலும் எழுவோம்,
தோற்றாலும் முயல்வோம்,
தடைகள் வந்தாலும் தகர்ப்போம்
நம் பாதையை நாமே அமைப்போம்!

பிறர் காட்டும் பாதையில்
நடப்பது மட்டும் வாழ்க்கையல்ல;
நம் கனவுகளுக்காக
நாமே பாதை படைப்பதே வாழ்க்கை!

பெண்ணென்றும், ஆணென்றும்
எந்த எல்லையும் வேண்டாம்;
உழைப்பை ஆயுதமாக்கி,
தன்னம்பிக்கையைத் துணையாகக் கொண்டு
உயர்ந்து நிற்போம்!



நாடு பெற்ற சுதந்திரம்
நம் முன்னோர்களின் தியாகம்;
அதைக் காக்கும் பொறுப்பு
இன்றைய தலைமுறையின் கடமை!

சார்ந்து நிற்பதல்ல
சாதித்து நிற்போம்!
அடிமையாக வாழ்வதல்ல
சுதந்திரமாக உயர்வோம்!

வந்தே மாதரம்!

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# காட்சிப் பிழையோ?

கையடங்கும் வெண்ணிலவே
காட்சிப் பிழையோ?
************************

கையடங்கும் வெண்ணிலவே,
காட்சிப் பிழையோ?
விண்ணுலக மங்கையே,
இரதியின் அம்சமானவளே!

இரம்பையின் உடன்பிறப்பே,
இரசனைக்கு உரியவளே!
ஊர்வசியாய் மிளிர்பவளே,
உள்ளத்தில் நிறைந்தவளே!

வசியம் செய்தாயே,
வசமானேன் உன்னிடமே!
சித்திரை நிலவே,
முத்திரைப் பதித்தவளே!

மைவிழிப் பார்வையில்
மையல் கொண்டேனே!
நாணத்தில் நின்றவளே,
நளினத்தில் சொலித்தவளே!

வெண்ணிற முத்துக்களாய்
உந்தன் சிரிப்பே!
உள்ளத்தில் களிப்பே,
எழிலில் திகைப்பே!

தித்திக்கும் அதரங்கள்,
திகட்டாத அமுதமே!



பனித்துளியாய் உருகுகிறேன்
உந்தன் அன்பிலே!

அணைத்திட மகிழ்கிறேன்,
குதூகலம் அடைகிறேன்!

கையடங்கும் வெண்ணிலவே,
காட்சிப் பிழையோ?

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

மண்சுவர் வீட்டு ஜன்னல் திறந்தால்,
மல்லிகை வாசம் முகத்தில் மோதும்;
பாட்டியின் கை வளையல் சத்தம்,
அடுப்படியில் கஞ்சி கொதிக்கும் ராகம்
அதிகாலைக்கே உயிர் கொடுத்தது அந்த ஊர்.

வயல் வரப்பில் வெறுங்கால் நடந்தால்,
பனித்துளி கால் நனைத்து கதை சொல்லும்;
குளக்கரைப் புளியமர நிழலில்,
கிட்டிப்புல் விளையாட்டின் சிரிப்பு
இன்னும் காதில் ஒலிக்குதே!

நகரத்து கடிகாரம் நேரம் சொல்லுது,
ஆனா, கிராமத்துச் சேவல் வாழ்க்கை சொல்லித் தந்தது.
கான்கிரீட் காட்டில் தொலைந்த என்னை,
மண்வாசனை மறுபடி மனிதனாக்குது.
அந்த ஊர் இல்ல: அதுதான் நான்!




கவிஞர் நஸ்ரினா, குருநாகல் (இலங்கை)

# யார் சருகுகள்?

அழகு குன்றிச் செயலிழந்து,
பச்சையமும் இழந்து,
மூப்படைந்து போனதால்,
இலைகளுக்கும் கிளைகளுக்கும்
ஏற்பில்லைப் போலும்!

சிறு காற்றிற்கும் புறுபுறுக்கும்
அவற்றின் சரசரப்புகள்
மரங்களுக்குக்கூட
இடைஞ்சலாயிருப்பதால்தான்
கீழே உதிர்த்துவிடுகிறது
சருகுகளை.



அவைகளும் ஒரு போது
விருட்சங்களுக்கு அழகூட்டி,
பூக்களை அண்டியிருந்து,
பிராணிகளிடமிருந்து
பழங்களை மறைத்து வைத்து,
செழிப்போடு பணி செய்ததுதான்.

உதிர்ந்த பின்பும்,
இந்தப் பூமிக்கு உரமாகும்
தகுதியுள்ள சருகுகளை,
புரிந்துகொள்ளாமலும்,
அன்பு செலுத்தாமலும்,
குப்பையாகக் கூட்டி ஒதுக்கி,
முதியோர் இல்லங்களில்
தள்ளிவிடும் சுயநலமிகளுக்கு,
சருகாகாத வரமுண்டோ?

கவிஞர் சம்மாந்துறை மஷூறா

# இலவசத்தின் விலை

ஆற்றினை மூடிப் பூத்திடும்
சோளப்பொறி இலவசம்!
இரையல்ல, இரும்புப்பொறி;
அறியா மீன்கள் தோற்றிடும்!



நுழைவுக் கட்டணம் இல்லையாம்;
உள்ளே சென்றாலே தொல்லையாம்;
சிந்தை மறந்து குதிக்கின்றாய்;
சுயகௌரவம் துறந்து நடிக்கின்றாய்!

பரிசு மோகம் நெஞ்சில்
பதற வைக்கும் நஞ்சாய்;
உரிமைகள் எல்லாம் பறிக்கும்;
உயிரற்ற ஆசை முளைக்கும்!

உழைக்காமல் உண்டு வாழ,
உயராமல் வெற்றி சூட,
உணரா மந்தைகள் மேடையிலே,
உதவாக்கரை கூட்டம் சேரும்!

பணிவாய்ப் பரிசை அளித்து,
பணிகள் பலதையும் பறித்து,
பாதணி மறந்து நடக்கும்
பாவிகளாய்ப் பாரினில் விடுவாரே!

அறிவை அகழ்ந்து சென்றிடவே,
அனைத்தும் இலவசம் என்றிடுவார்;
சுயமாய்ச் சிந்திக்கும் திறனும்
சுத்தமாய் விற்று நின்றிடுவாய்!

சோம்பேறிச் சந்தையிலே தொலைந்து,
அந்தரங்கங்கள் அகதியாய் அலைந்து,
அடிமைச் சாசனம் வாங்கிடுமே;
அப்பாவி மானிடனே உனக்கும்!

இழித்துக் கொண்டே இதமாக
இலவசமாய்ப் பெற்ற பொருள்,
காலம் முழுதும் கண்ணீராய்
நம்மை ஆளும் இருள்!

கவிஞர் றபீதீன் றபீஉல் பஸ்ரானா, நேகம

# இதோ காதல்

காதல் என்னவென்று
நீ அறிய நேரிட்டால்,
காதல் பெற்று, தோற்று
நின்றவரிடம் கேட்டுப் பார்.

எது காதல் என்று?

அவரின் வலிகளே
காதல் அன்று!



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# வாழ்க்கை ஒரு நாடகமே



எல்லா நேரமும்
எல்லாருமே
ஒரே மாதிரி இல்லை.

மாறிப் போவது காலமே
என்ற கருத்தும் உடைந்தது,
மாறி நின்ற மாந்தர் மனம்
கண்டதும்.

இன்னும் ஏனோ
நான் மட்டும் மாறாமல்,
அதே அன்பைத் தேடிக்கொண்டே
அலைகிறேன்.

மாற்றம் எல்லோருக்கும் எனில்,
ஏன் எனக்கு மட்டும்
வரவில்லை...?

"என் வாழ்வே நீதான்"
என்று சொல்லிக்கொண்ட பலரும்,

"யாரோ நீ..."
என்பது போல
கடந்து போகும் போதும்,

கொஞ்சம் வலிக்கிறது;
என்றாலும்
நானும் பழகிக்கொண்டேன்.

மாறியது போல
நடிப்பதற்கு.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# எண்ணங்களின் சாயல்

வாழ்வின் சில பொழுதுகள்
பிறப்பை நினைத்து
பூரிக்கச் செய்கின்றன.

இன்னும் சில பொழுதுகள்
இறப்பை வேண்டி நிற்கின்றன.

பிறந்து விட்டோம்
என்பதற்கான வாழ்தலும்,
இறக்கத்தானே பிறந்தோம்
என்று வாழ்தலும்,
பிறப்பின் மகிமையை
உணர்ந்த வாழ்தலும்,
இன்றெல்லாம் ஒன்றையொன்று
தர்க்கித்துக் கொள்ளாமலில்லை.



மண்ணில் புதையுறும்
விதைகள் எல்லாம்
விருட்சமாகும் என்ற
நியதியில்லை.

விருப்புகளும்
எண்ணங்களுமே தான்
அங்கே நிலைபெறச் செய்கின்றன.

கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை

# வறண்ட நிலம்

ஆடிக் காற்றில் வறண்ட நிலத்தை
சிறு மழைத்துளி புத்துயிர் கொடுக்கிறது.

ஊட்டச்சத்து மருந்துகள் போல,
பூமியில் இருக்கும் தாவரங்கள்
பேரின்பம் கொள்கின்றன.

மண்ணில் புதையுண்ட விதைகளோ
விருட்சமாகின்றன.

மனிதனோ தன்னிலை மறக்கிறான்;
ஏதோ புதிய மாறுதலைக் கண்டது போல!

என்றும் மாற்றத்தினைத் தருவது
இயற்கைதானே!



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, வளையமாதேவி (சிதம்பரம்)

# புல்லாங்குழலின் புதுராகம்!

புல்வகையைச் சேர்ந்த தாவரத்தின் பாகத்தில்
உள்ளம் கவரும் இசை உருவாகிறதே!
கணுக்கள் தூரமாக அமைந்த மூங்கிலாம்
ஆணல் ! அதிலிருந்து உருவாக்கப் படுவதுதான்
புல்லாங்குழல்! கணுக்களின் இடைவெளியில்
அளவான துளையிட்டால் எழும்பிடும் சுரங்கள்!
சுவாசக் காற்றை இசையமுதாய் மாற்றி
சுதிசேர்த்துப் பாடும் அற்புதக் கருவி!
காற்றுடன் விரல்கள் வருடிக் கொடுத்தால்
காதல் மொழிகள் பேசத் தொடங்கும்!
கானம் பரவிட கரைந்திடும் கல்நெஞ்சும்!
கண்ணனின் கைகளில் தவழ்ந்திடும் வேய்ங்குழல்!
ஆவினங்களை மயக்கிட ஆயர்தம் கரங்களிலும்
பழந்தமிழர் காலத்தில் விளங்கியது குழலாகும்!
காற்றோடு குழலின் நாதம் பரவிட
கேட்பவர் இதயங்கள் குளிர்ந்து மயங்கிடும்!
பல்வகை இராகங்கள் குரலினில் ஒலித்திட
குயிலோசை குழலிசையில் மயிலறகாய் மனம்வருடும்!
துயரங்கள் பறந்தோடி துன்பநிலை மாறிடுமே!
எல்லைகளைக் கடந்த இசையின் மொழி!
எண்ணற்ற இதயங்களை ஈர்த்திடும் வழி!
புல்லினத்திற்கு இயற்கை சூட்டிய மகுடம்!
காலங்கள் மாறினாலும் கானங்கள் மாறாது!
புல்லாங்குழல் பேசும் புதுமொழியை இரசிப்போமே!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# கிணற்றுத் தவளைகளும் ஞானப் பறவையும்



பெயருக்கு முன்னால்
பட்டத்தைப் போட்டுவிட்டு,
புகழுக்குப் பின்னால் ஓடும்
கிணற்றுத் தவளைகள் அல்ல... நான்!

சாதியை ஏணியாக்கி,
வாய்ப்பை எட்டிப் பிடிக்கும்
எத்தனும் அல்ல...

சாதிப்பதை ஏணியாக்கி,
சமத்துவத்தைத் தோணியாக்கி,
தோல்வியை ஓடவிட்டு,
பக்குவத்தை மனதில் ஆடவிட்டு,
வெற்றி, தோல்வியைச் சமமாக
எண்ணி, சமுதாய வீதியில்
பறக்கும் ஞானப் பறவை நான்.

எதுவும் தெரியாதவர்கள்
எல்லாம் தெரியும் என்ற
அகம்பாவத்தால் நிற்கிறார் முன்னால்...

எல்லாம் தெரிந்தும்,
அடக்கமே உயர்வு என்ற
அகம் தந்த பாடத்தால்
நிற்கிறார் பின்னால்...

இந்த நிலை மாறும்
நாள் எந்நாள்?

இதை எழுதுவது கூட
மனதில் ஏற்பட்ட புண்ணால்...



இனியாவது விழித்துப்பாருங்கள்
அறிவுக் கண்ணால்...

"அவனை வளர விடாதே" என்று
அழியப் போகும் உங்கள்
ஆணவம் சொன்னது...

"அவனும் வளரட்டும்" என்று
அழியாமல் இருக்கும்
சமத்துவ ஆவணம் சொன்னது.

ஞானப் பறவைக்குப்
பறக்க அனுமதி எதற்கு
என்று கிணற்றுத் தவளைகள்
செய்யும் சதி...

ஞானப் பறவைக்கு எல்லைகள் இல்லை...
புரிந்துகொண்டால்
தொல்லை இல்லை...

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி

# அன்புச் சங்கிலி

வாழ்ந்து மறைந்த முன்னோர்களின்
வாழ்வியலும் அனுபவமும்
நம் வாழ்விற்கு என்றும் பாடமே...!

அனுபவத்தின் சுவடுகள்
வாழ்விலென்றும் அற்புதமே...
முன்னோர்கள் தெய்வம்தான்,
நாம் வணங்கும் கடவுள்தான்!



வாழ்வின் உயர்வுக்கு
முன்னோர்களின் வாழ்வியலே
காலச்சுவடுகளாய்,
நமக்கென்றும் பாடமாய்
வாழ்விற்கு அமையுமே...!

உண்மையும் நேர்மையும்
வாழ்விலென்றும் சிறக்குமே;
நீதியும் நேர்மையும்
நேர் வழி தந்திடுமே!

இதயத்தின் ஊற்றாய்
இரக்க குணம் வேண்டுமே;
எந்நாளும் வாழ்வுதான்
அன்பாய் மலர்ந்திடுமே!

வாழ்வே சிறந்திடும்;
வளமே நிலையாய் அமைந்திடும்.
அன்புச் சங்கிலியில்
ஒற்றுமையாய் இணைந்திடுவோம்!


கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

இந்தத் திருவிழாக் கூட்டத்தில்
மாட்டிக்கொண்டு திகைக்கிறேன்;

வந்த வழி தெரியவில்லை,
போகுமிடம் புரியவில்லை.

வருகிறார்கள், போகிறார்கள்,
மகிழ்ச்சியாக அழுகிறார்கள்.
யாரைப் பார்த்தாலும்
என் நகலெனத் தெரிகிறது;

குடைராட்டினம் சுற்றிச் சுற்றி வருகிறது.
ஆடுபுலி ஆட்டம்,
பரமபத விளையாட்டும்
மரத்தடியில்...



நானே ஏணியாகவும், பாம்பாகவும்
மாறி மாறிக் களிக்கிறேன்;

எல்லாவற்றையும் கேட்டால்,
எப்படி வாங்கித் தருவது
என்று சத்தம் போட்டுப்,
பிள்ளையை இழுத்திழுத்து
அடிக்கிறாள்
சுருக்குப் பையைத் தொலைத்த அன்னை.

கவிஞர் வளவ. துரையன்

# தனியொருத்தி



கரையோரம் நின்றிருந்தாள்
கன்னியொருத்தி;
கனவுகள் பலவாக நெஞ்சுருகும்
காத்திருப்பில்.

கண்ணுக்கு எட்டியவரை
சிக்காத நாயகனை,
கல்யாணக் கனவுகளில்
ஆசையுடன் தேடினாளே.

மாலையிடும் பொழுதுக்கு
மனதோடு பேசிக்கொண்டு,
சிங்காரம் குறையாமல்,
சிரித்த முகவடிவில்...

வருஷங்கள் ஓடியதால்,
வற்றி விட்டதோ நேசமும்?
வஞ்சகம் செய்யாதே;
வதைத்துக் கொல்லாதே!

பொழுது சாய்ந்ததும்
பூக்காரி வந்துவிட்டாள்;
குழல் அசைந்து இழுத்தது,
பூக்களின் மணம் வேண்டி.

கள்வனைக் கண்ணாரக் கண்டாலே
களைப்பும் நீங்கிடுமோ?
முல்லைப் பூவின் அழைப்பில்
மோகம் முத்திப் போனதே!


ஏக்கம் பெருமூச்சில் எஞ்சாமி,
நெஞ்சம் தவிக்குதே;
ஆவாரம் பூக்களே, அவரைக்
கண்டால் சொல்லுங்க...

அகத்தினைக் கொய்தவனே,
சிறை செய்து சென்றவனே,
அழியாத நேசமென்று
அசைத்துப் போன மன்னவரே!

தாளாத தவிப்பில் தனியொருத்தி,
தனிமையிலே...
வீசிப் போகும் காற்றே,
கைப்பிடித்து அழைத்து வா!

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# விரையும் காலம் விரியாத பாசம்



நாட்களின் வேகம் மிக விரைவாகவே!
நினைவுகள் மட்டும் நெஞ்சில் நிறைகின்றன!
காலத்தின் ஓட்டம் கண்முன் கடக்கிறது!
கனவுகள் மட்டும் கைகளில் நழுவுகின்றன!

பருவங்கள் பலவும் பறந்தோடுகின்றன!
பாசங்கள் மட்டும் பாதியில் நிற்கின்றன!
நேற்றின் தடங்கள் நெஞ்சினில் வாழ்கின்றன!
நாளைய தேடல் நம்மை அழைக்கின்றது!

வசந்தம் வந்ததும் வண்ணங்கள் மலர்கின்றன!
வாழ்வின் வலிகள் வேராகின்றன!
சிரிப்பின் பொழுதுகள் சிறகாகின்றன!
சிந்தனை விதைகள் சிறப்பாகின்றன!

இளமைப் பொழுதுகள் இமைப்பில் மறைகின்றன!
இனிய தருணங்கள் இதயத்தில் உறைகின்றன!
கடந்த காலங்கள் கதைகளாய் மாறுகின்றன!
கற்ற பாடங்கள் காலத்தையும் வெல்கின்றன!

நாடோடி வாழ்வு நம்மையும் அழைக்கின்றதே!
நாட்டை விட்டு வந்த நாள் நினைவில் நிற்கின்றதே!
நாள்கள் சிலவே நம்முடன் நின்றிடுமே!
நெஞ்சம் நிறைந்த பாசம் நிழலாய் தொடருமே!

விடுமுறை வந்தது விழாவாய் தெரிந்ததே!
விடியும் பொழுதெல்லாம் விருந்தாய் அமைந்ததே!
விடைபெறும் நேரம் விழிகளில் கனக்குமே!
வீட்டாரின் பாசம் இதயத்தில் இனிக்குமே!

சொந்தங்கள் சூழ்ந்த சுகநாள் முடிகின்றதே!
சிரிப்பொலி நிறைந்த சிறுநேரம் கரைகின்றதே!
பிரிவின் வேதனை நெஞ்சத்தில் நிறைகின்றதே!
புதிய பயணப்பாதை மீண்டும் திறக்கின்றதே!

மனைவியின் பாசம் மனதைத் தழுவுமே!
மக்களின் சிரிப்பு மனதில் ஒலிக்குமே!
தாயின் தவிப்பு தூரத்திலும் தொடருமே!
சகோதரிகளின் பாசம் நெஞ்சோடு நிற்குமே!

நண்பர்களின் நட்பு நெஞ்சத்தில் நிலைக்குமே!
குடும்பத்தார் அன்பு குறையாமல் தொடருமே!
விடுமுறை முடிந்தும் விழிகள் நனையுமே!
விரைவில் வருவாய் என வாசல்கள் காத்திருக்குமே!

வந்தவர் சென்றாலும் வாசம் நிலைக்குமே!
வாழ்ந்த சில நாட்கள் வரமாய் நினைக்குமே!
காலம் கடந்து கொண்டே இருந்தாலும்,
காணும் தருணங்கள் கைவிடக் கூடாதே!

வாழ்க்கை விரைந்தோடும் வண்டியைப் போலவே!
வாழும் நொடியெல்லாம் வசந்தமாக்குவோம்!

கவிஞர் ஷல்மா ஷாஜஹான், வாழைச்சேனை

# எதிர்பாராத சந்திப்பு

மன அமைதி நாடி ஆலயம் சென்றேன்;
தரிசனம் கண்ட பரவசத்தில்
ஓரிடத்தில் அமர்ந்திருந்தேன்.
அங்கே... உழவாரப் பணியில் பெண்
ஒருவரைக் கண்டு, பின்னோக்கிச் சென்றது
நினைவுகள்.



ஏனோ... மீண்டும், மீண்டும்
மனதில் ஓர் வினா எழுந்தது.
உடன் படித்த தோழியாக இருக்குமென்று
உள்ளுணர்வு உரைத்துக் கொண்டேயிருக்க...

கேட்கவா, வேண்டாமா என்றே
சிறு தயக்கம்.
துணிச்சலை வரவழைத்துக்கொண்டு,
அவர் பெயரையும், பள்ளியின்
பெயரையும் எடுத்துரைக்க,
"ஆமாம்" என்றார் தோழி.

"உடன் படித்த பத்தாம் வகுப்புத்
தோழி நான்தான்" என்றதுமே,
ஆரத்தழுவி அணைத்த அந்த நொடியில்
இதயம் படபடக்க, கண்கள் பூரிக்க,
இதழ்களில் புன்னகை பிறக்க...
வார்த்தைகளில் தடுமாற்றம்.

இரண்டு வருடங்கள் மட்டுமே
படிப்பு; அதில் பிறந்தது நமது நட்பு.
எப்போதும் உன் முத்துப்பல் சிரிப்பு.
நாம் இருவரும் ஒரே வகுப்பு.
அதிகம் பகிர்ந்து உரையாடியதில்லை;
அதுதானே இங்கு வியப்பு!

நாற்பது வருடங்களுக்குப் பிறகு சந்தித்த
இவ்வேளையில், அளவில்லா ஆனந்தத்தின்
எல்லையில் நாமிருவர்.
காலங்கள்தான் எவ்வளவு விரைவாகக் கடந்து விட்டன!

வாழ்க்கையில் ஒருமுறையாவது
உடன் படித்த தோழி ஒருவரையாவது
சந்திக்க வேண்டுமென்ற
எனது நீண்ட நாள் ஏக்கம் நிறைவேறியது,
எதிர்பாராத சந்திப்பில்.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# இதற்கா இந்த சுதந்திரம்?

அகிம்சையால் அந்நியர்களை விரட்டிய
அண்ணல் காந்தியைத் துப்பாக்கிக்
குண்டிற்குப் பலி கொடுத்தோம்;
இதற்கா இந்தச் சுதந்திரம்?

இந்திய நாட்டின் இரும்புப் பெண்மணியான
அன்னை இந்திரா சுட்டுக் கொல்லப்பட்டது
வெள்ளையர்களால் அல்ல,
இந்தியக் குடிமகனால்;
இதற்கா இந்தச் சுதந்திரம்?



அரசிடம் இருக்க வேண்டிய
கல்வித் துறை தனியாரிடம் இருக்கிறது;
தனியாரிடம் இருக்க வேண்டிய
மதுபான ஆலை அரசிடம் இருக்கிறது;
இதற்காகவா இந்தச் சுதந்திரம்?

அந்நியர்களுடன் போராடி,
அவர்களை நாட்டைவிட்டு விரட்டியடித்தோம்.
ஊழல் பெருச்சாளிகளான அரசியல்வாதிகளை
எங்கு விரட்டியடிப்பது என்று தெரியாமல்
விழித்துக்கொண்டிருக்கின்றோம்;
இதற்கா இந்தச் சுதந்திரம்?

கவிஞர் தங்க. பிரியதர்ஷினி, கறம்பக்குடி

# நட்புக்கு எல்லையில்லை



எல்லையற்றது அன்பு என்பார்;
நட்புக்கும் எல்லை இல்லை.
எல்லையிலா நட்பு எதுவெனத்
தெளிந்தபின் மட்டற்ற மகிழ்வு.

நட்பினைத் தெரிந்து தெளிய
நான்கு அதிகாரங்களே சான்று.
வள்ளுவன் நட்பு, நட்பாராய்தல்,
கூடாநட்பும் தீ நட்புமென்பதே அது.

எல்லையில்லா நட்பைப் போற்றி
எடுத்த திரைப்படம் எத்தனை?
தளபதி அதில் முக்கியமானது;
தாய்ப்பாசமும் கலந்திருப்பதால்.

"முகநக நட்பது நட்பன்று; அகநக
நட்பதே நட்பு" — இலக்கணம்.
கோப்பெருஞ்சோழன் — புலவர் பிசிராந்தையாரின்
மானசீக நட்பு.

ஔவை — அதியமான் நிறைநட்பு;
குகன் — இராமன் இதிகாச நட்பு.
இன்னும் எத்தனையோ உண்டு;
இயம்ப இடம்போதாதே இன்று.

நாயன்மார்கள், ஆழ்வார்களிடம்
கடவுள் கொண்டது இறைநட்பு.
அதற்கும் எல்லையே இல்லையே!
நட்பின் வீற்றிருக்கை என்பார் வள்ளுவரதை.

உயர்வான எண்ணமது வளர,
வல்லமையாய்ச் செயல்கள் பரவ!

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

அன்னை நாடு அடைந்த சுதந்திரம்
பெற்றிட கடிணம் பெரும் துயருடன்
விடுதலை வேட்கையில் செத்து மடிந்தனர்
ஆங்கில வம்சம் விட்டு ஒழிந்தனர்!

மொழிகள் நிறைந்து இயக்கம் ஒன்றாய்
தேசிய நலனில் மக்கள் இணைந்தனர்
நாட்டுப் பற்றால் நல்லவர்கள் கூடி
பெற்ற சுதந்திரம் பேணிக் காத்திடுவோம்!



மாநிலங்கள் வேறாய் சூழலும் வேறு
சுதந்திரம் ஒன்றால் தேசமும் ஒன்றே
சூழ்ந்திடும் கடலும் மூன்று திசையினில்
வடக்கினில் இமயம் வளர்ந்த நாட்டிலே!

கங்கை காவிரி ஒன்றாய் இணைந்தால்
ஒழிந்திடும் பஞ்சமே தெற்கிலும் வடக்கிலும்
தொழில்கள் வளர்ந்து தீர்ந்திடும் வேலையின்மை
நலிந்தவர் வளமாய் வாழ்வர் நலமாய்!

தியாகம் செய்த தியாகிகள் நிறைந்தே
திரும்பிடும் உலகம் மக்கள் மிகுந்தே
உலகினில் பெரிய சனநாயக நாட்டில்
வாழ்வது நன்றே வளமும் மிகுந்தே!

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

# ஊமையான இன்று

கனவுகளிலும்,
நினைவுகளிலும்,

எளிய
கவிதை மலர்களைப்
பறித்துக்கொண்டிருந்த இவளது
உள்ளம் உனக்காகவே
ஏங்கிக்கொண்டிருக்கிறது.

இப்போது,
இவள் வாழ்க்கை
வேடிக்கையானதாய்
அமையப் போகிறது.

வானத்தில் இருந்து ஒரு
நட்சத்திரம்
பூமியை நோக்கி
விழப் போகிறது.

மலர்த் தோட்டத்தில் இருந்து
ஒரு மலர்
உதிர்ந்து விடப் போகிறது.

என்ன முடிவெடுத்தாலும்,
எந்த மூலையில் இருந்தாலும்,
இவள்
உன்னைச் சிந்தித்துக்கொண்டேயிருப்பாள்.



இவள் இந்த முடிவை விரும்பவில்லை.
இவளை இந்த முடிவு விரும்புகின்றது.

இவள்
இப்போதெல்லாம்
கன்னங்கரிய காகங்களையும்,
குயில்களையும் தனது
நண்பர்களாக்கிக் கொண்டாள்.

சில நேரம்,
சில மனிதர்களால்

காயப்பட்ட இவளின்
சின்ன உள்ளத்திற்கு
ஆறுதல் கிடைக்கவே,
இவளது உள்ளம் ஊமையாகிறது.

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

# கதை ஆச்சரியம்

பேசு உடைத்து விழ,
நினைத்து உதிரப் படாத
சொற்களைப் புதைத்து,
விழுந்த மௌனங்களை
எல்லாம் தட்டியெடு.

துரத்திவிடப்பட்ட கனவுகளை
எல்லாம் அன்பாக அழைத்து,
ஆறுதல் சொல்.

தவறவிட்ட பொழுதுகளை,
தவமாக்கிய காலத்தை,
தகுந்த காரணத்தோடு
நியாயம் கேள்.

அவர் அவர் செய்தி
வாசல் வரும்வரை அனைவரும்
இங்கு புத்தர்கள்தான்.

இரவுக்கும் பகலுக்கும்
காது கேட்கும் என்பதே, அவர்கள்
சொல்லித்தான் தருகிறது.

நம் வீட்டுக்கு ஒரு வரி,
பக்கத்து வீட்டுக்கு ஒரு செய்தி;
இதில் எனக்கும் ஒரு கதை இருந்தால்
ஆச்சரியமா என்ன...?



கவிஞர் டோ. மெர்லின் மரியா

கதவுகளும்
ஜன்னல்களும்
மீண்டும்
மூடிக்கொள்ள
இருள் கூட்டத்தில்
பார்வைகள் தேடும்
தன்
தொலைந்து போன
நிழலை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

கனவொன்று கண்டேன்;
கானலாகுமென்று பயந்தேன்.
பயந்த நெஞ்சுக்குள்ளே
நீங்கா வலுவிலே
வாழ்க்கையே வாழவே,
நிஜமாகவே கனவே, களையாதிரு.

பொருத்தங்கள் தேடி,
விருத்தங்கள் ஏவி,
காலமே கடந்திட,
கண்ணீரும் வலித்தடம்
கன்னத்தில் பதித்திடுதே.

நேரமொன்று கூடினால்,
நேரெதிரிலே நிழலுமே நிஜமாகுமே!
கூவி அழைக்குது காகம்;
கேவி அழைக்குது தாகம்.

நிறங்களுக்குள் நிலலாடும்
கனவே, களைந்திடுவாயோ?
சேதாரம் தந்துபோகிற
வலியெங்கிலும்,
வாவிநீரும் கண்ணீரில் வந்திடும்.

வற்றா நதியென
ஊற்றுகள் எழுகிற
கானலாகிடுமோ எனும் கனவிலே,
நிஜமாகவே பிரார்த்தனைகளும்
நாளும் பொழுதும்
கூடுமெனக் காத்திருக்க நேரும்.



கவிஞர் தூரிகை, இலங்கை

**1**

வர்ணமின்றியே
வண்ணம் தீட்டுகிறது
நிலா.

**2**

பரந்த வானத்தையும்
சிறை பிடிக்கிறது
சாளரம்.

**3**

பால்யக் காலத்தை
மீட்டுத் தருகிறது
பட்டாம்பூச்சி.

**4**

ஓலைக் குடிசைக்குள்
மின்னிக் கொண்டிருக்கின்றன
சூரியக் கதிர்கள்.

**5**

கிழிக்கப்பட்ட கடதாசி
செல்லுபடியாகிறது
பயணச்சீட்டு.



**6**

ஆக்ரோஷமாய் எழுந்தாலும்
அமைதியைத் தருகிறது
அலைகடல்.

**7**

கடந்து போன தருணங்களையும்
கண்முன்னே நிறுத்துகிறது
நினைவுகள்.

கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று

வெளிப்படையில் கடினமாய்த்
தோன்றிடினும்,
உள்ளுக்குள் மெல்லிய மலரல்லவா?

சிறு துயரத்தின் புயல் அடித்தாலும்,
சிதறி விழும் இந்த மானிட மனம்...



பிறர் நிழலாய் மாறி நீ கரைந்துபோனால்,
உன் சொந்த நிழலே உன்னை எள்ளி நகையாடும்.

உனக்கென ஆசையும்,
பேசும் ஆர்வமும் இருந்தும்,
தயங்கித் தயங்கி நிற்பது ஏனோ?

எதற்கும் பிறரின் விருப்பத்தை மட்டுமே எதிர்பார்ப்பின்,
உனக்கென ஒரு தனித்துவ வாழ்வுதான் ஏது?

பிறரின் கைப்பாவையாய் வாழ்ந்தது போதும்;
உன் மனச்சாட்சியின் குரலைக் கேட்கத் தொடங்கு.

காயப்பட்ட இதயம் இனித் தேறி
என்ன செய்யுமெனத் தயங்கி நிற்காதே.
காலம் உன்னைக் குணமாக்கும்.

அடிபட்ட அடியிலேயே
புதிய வழிகள் பிறக்கும்.
விழுந்த மனமும் மெல்லத்
தன் வலிமை உணரும்.

சிறு காற்றுக்கே உதிர்ந்த இலைகள் மாறி,
புயலையே தாங்கும் கற்பாறையாய்
மனம் மாறும்.

உலகம் உன்னை மதிக்காது என்று
நீயே உன்னைக் குறைத்து,
உன் சாதனைகளின் கதவை மூடாதே.

வெளியுலகப் போருக்கு
வலிமையான கவசமிடு.

மாற்றங்கள் சூழ்ந்த இந்த வாழ்க்கைப் பயணத்தில்,
காயங்களைக் கடந்து நிற்பதே பேரழகு!

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

# நம்பிக்கை தோற்காது

தோற்பது மனிதனின் கால்கள்;
தோற்பதில்லை அவன் கனவுகள்.

மூடிக்கொள்ளும் ஒவ்வொரு கதவும்,
தட்டுவதற்கு இன்னொரு கதவைக்
காட்டுகிறது.

இருள் சூரியனை வென்றதில்லை;
அதுபோல,
விரக்தி நம்பிக்கையை வீழ்த்தியதில்லை.

கடல் அலைகள்
கரையை மோதுகின்றன;
கரை அவற்றை வெறுப்பதில்லை;
மீண்டும், மீண்டும் வரச் சொல்கிறது.

விதை மண்ணுக்குள் புதைக்கப்படுகிறது;
அது தோற்றதில்லை...
மரமாக திரும்பி வருகிறது.

கண்ணீரும் ஒருநாள் புன்னகைக்கான
விதையாகிறது.



வீழ்ந்தவன் தோற்றவன் அல்ல;
எழ மறுப்பவனே உண்மையில் தோற்றவன்.

நேற்று முடிந்த கதை;
இன்று எழுதும் பக்கம்;
நாளை இறைவன் திறக்கும்
புதிய அத்தியாயம்.

எனவே...
புயல் வந்தாலும் பயணம் நிறுத்தாதே;
இருள் சூழ்ந்தாலும் விளக்கை அணைக்காதே.

உலகம் கைவிட்டாலும்,
இறைவன் மீது நம்பிக்கை வைப்பவன்
ஒருபோதும் தோற்பதில்லை.

ஏனெனில்...
நம்பிக்கை என்பது
வெற்றியின் நிழல் அல்ல;
வெற்றியை பிறப்பிக்கும் ஒளிக்கதிர்!


அதனால்...
நம்பிக்கை ஒருபோதும் தோற்காது!

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகலூவத்த, கலேவெல

வரிசையாக போதி மரங்கள்
கற்று கொள்ளும் மௌனியாக
அவள்

போதி மரக்காடு
அவளுக்கானதும் தானே!

(பின் குறிப்பு - அவள் புத்தனின் மனைவி அல்ல )



கவிஞர் அகிதா

பெண்ணும் பனையெனும் மரமும் ஒன்றே!
மண்ணில் பயனுறும் பெருமையும் நன்றே!
அரியணையில் ஏற்றி இருந்தார்கள் அன்றே!
அனலுக்குச் சூளையிலே எரிப்பது இன்றே(ன்)?



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

(1)

கற்றாழை தாள் நுனி
பனித்துளி அணி
புல்லக்கு தொங்கல் அழகு

(2)

பச்சை புல்வெளி
ஒளி ஊட்டுகிறது
கற்றாழை நுனி தீபம்

(3)

சூரியன் எழும்ப
மின்னும்பனித்துளி
கற்றாழை விளக்கு கம்பம்



(4)

புல் நுனி தீபம்
குடை விளக்கு
புல்வெளி ஒளிர

(5)

ஆதவன் சிரிப்பு
கற்றாழை விளக்கு
ஒளி மங்கல்

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

## அதில் இல்லை, இதில்

யோசிப்பு என்பது
நேரத்தில் இல்லை;
அதன் ஆழத்தில்,
வாய்ப்புகளின் அலசலில்.

சந்தோஷமும் உற்சாகமும்
கால அளவுகளில் இல்லை; காரணத்தில்.

வருத்தமும் சோகமும்
எவ்வளவு நேரம் என்பதில் இல்லை;
எதற்காக என்பதில்.

பேச்சு என்பது
மணிக்கணக்கில் இல்லை;
பேசும் பொருளிலும்,
சொல்லும் விதத்திலும்.

செயல்பாடு என்பது
நேர அளவுகளில் இல்லை;
இலக்கை நோக்கியா என்பதில்.

கருணையும் உதவுதலும்
பேசுவதில் இல்லை;
எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதில்.

***********************



## நானெல்லாம் அப்ப...

தன்னை முன்னிறுத்துவதற்கும்,
பாராட்டு கேட்கவும்
ஆசைப்பட்டு,

"நானெல்லாம் அப்ப..."
என்று பழைய கதை
ஆரம்பித்தால்,

சிலருக்குக் கேட்டுக் கேட்டு
சலித்திருக்கலாம்.
சிலருக்கு
"உண்மையா?" என
எண்ணத் தோன்றலாம்.

சிலருக்கு அதைப் பற்றிக்
கேட்க விருப்பம் இல்லாமல் இருக்கலாம்.
சிலருக்குக் கேட்க
பொறுமை இல்லாமல் இருக்கலாம்.

சிலருக்குச் செவி கொடுக்க
நேரம் இல்லாமல் இருக்கலாம்.

எதுவும் சொல்ல வேண்டாமே...

நம்முடைய தற்போதைய திட்டமிடலும்,
செயல்பாடுகளும், விளைவான
முடிவுகளும் பேசட்டுமே..

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

அத்தியாயம் - 2

யாரு வசந்தா?

நவீனம்

டெலிபோன் "பீப் பீப்" என்றது. எல்லா சினிமா வில்லன்களைப் போல ஒரு இளம் பெண் உடம்பைத் தொட்டுக் கொண்டிருந்த கைகளை உதறிப் போனை எடுத்தார் கேப்டன் ராஜ்.
"ஹலோ கேப்டன் ராஜ் ஸ்பீக்கிங்", "கேப்டன் சுகுமார் வந்து விட்டானா?"
"யாரு வசந்தா? நீ எங்கிருந்து பேசுகிறாய்?"

"கேப்டன் செம்பூர் போலிஸ் ஸ்டேஷனுக்கு அடுத்த கல்லியிலுள்ள மெடிக்கல் ஸ்டோரிலிருந்து பேசுகிறேன். வனிதாவை நான் ஸ்கூட்டரிலே விரட்டுக்கொண்லே வந்தேன். எப்படியோ தப்பித்துப் போய் விட்டாள்."

"இடியட் நீங்களெல்லாம் ஒழுங்காக மாடு மேய்க்கப் போகலாம். ஒரு பொண்ணை விரட்டிப் பிடிக்கத் தெரியாலை பொட்டப் பசங்க. சரி சுகுமார் போன விஷயம் என்னாச்சுது?"
"தெரியாது. அதனால தான் உங்களிடம் கேட்டேன்."

"சோறு திங்கத் தெரியுமா? ஒரு நாளைக்கு இரண்டு பாட்டில் ஜானி வாக்கர் ஊத்திக்கிட்டா இப்படிதான் மூளை பிசகிப் போகும். நீ அங்கேயே நில்லு. நான் உடனடியாக காரில் வருகிறேன்." என்ற கேப்டன் ராஜ் திரும்பவும் தன்னைத் தழுவிட வந்த உடையற்ற அந்தப் பெண்ணை உதறி விட்டு, உடைமாற்றிக் கொண்டு கிளம்பினார்.

கார் செம்பூரில் ராதா மெடிக்கல் சென்டரில் வசந்தை ஏற்றிக் கொண்டதும் வேகமாக குர்லாவை நோக்கி கிளம்பியது.

"சுகுமார் இப்போது வைரங்கள் அடங்கிய கேஸட்டை கோட்டை விட்டுட்டு எங்கேயிருப்பான் என்று நினைக்கிறாய்" ?

"ஜுகு பீச்சிலே ஒருத்தி கூட தொடர்பு வச்சிருக்கிறான். அங்கே இருக்கலாம்..பார்க்கலாம் காப்டன்" என்றான் வசந்த்.

அத்தியாயம் - 2

யாரு வசந்தா?

நவீனம்

"வினிதாவை எப்படி நம்பி நீயும் சுகுமாரும் கேஸட்டை ஒப்படைத்தீர்கள்"?

"ஸாரி கேப்டன், மிக நல்லவளைப் போல நடித்தாள். ஏற்கனெவே நமக்காக நான்கு வருடங்களாக உழைத்திருக்கிறாள். அதனால் தான்... மற்றபடி..."

"நீங்கள் ரெண்டு பேரும் அவ தொறந்து காட்டின உடனே நாயை மாதிரி நாக்கைத் தொங்கப் போட்டீர்களாக்கும் முட்டாள்கள்.

நம்முடைய தொழில் ரகசியமே நம்பிக்கையையே நாம் நம்பக் கூடாது என்பதுதான். ஏற்கனவே அவளுக்கு இந்தத் தொழில் பிடிக்க வில்லை என்று சொன்னாள் என்று சொல்லியிருக் கிறேனில்லையா. பன்னிப்பயல்களா. முப்பது கோடி மதிப்புள்ள வைரங்கள்... அவை பூனாவிலிருந்து கொண்டு வர நீயும் நானும் சுகுமாரும் உழைத்த உழைப்பு கடைசியில் கானால் நீராக...."

"ஸாரி கேப்டன். இந்த வஸந்தையும் சுகுமாரையும் தப்பாக எடை போடாதீர்கள். இந்தப் மும்பாயின் எந்த மூலை முடுக்கில் இருந்து அவளையும் கேஸட்டையும் இன்று சாயங்காலமே உங்களிடம் கொண்டு வந்து நிறுத்துகிறோம்"

"சொல்லாதுங்கடா பாவிகளா... அது யாரு பஸ் ஸ்டாண்டிலே நிற்கிறது. சுகுமாரா?" என்றவாறு காருக்கு பிரேக் போட்டான் கேப்டன் ராஜ்.

"டேய் சுகுமார் வா" என்று வஸந்த் அழைக்கும் குரல் கேட்டு காருக்கு அருகே வந்தவன் "ஸாரி கேப்டன். இப்படி நடக்கும் என்று எதிர் பார்க்க வில்லை" என்றான்.

"ஸாரி.... பெரிரிரிரிய... ஸாரி சொல்லிட்டா முப்பது கோடி வைரமும்திரும்பி வந்துடுமா? சுகு காரில் ஏறு... எப்படி வனிதாவிடமிருந்து கேஸட்டைக் கைப்பற்றலாம் என்று நான் சொல்கிறேன்" என்றார் கேப்டன்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை



அமுதபாரதி தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமான இடத்தைப் பெற்ற கவிஞர் ஆவார். கவிஞராக மட்டுமல்லாமல், எழுத்தாளர், இதழ் வடிவமைப்பாளர் மற்றும் ஓவியராகவும் பன்முகத் திறமையுடன் விளங்கியவர். இவரது இயற்பெயர் மா.கு. தாயுமானவன். இவர் ஆகஸ்ட் 31, 1939 அன்று திருவள்ளூர் மாவட்டம் மாமண்டூரில், மா. குமாரசாமி — வள்ளியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பள்ளி இறுதி வகுப்பு வரை கல்வி பயின்றார்.

## இலக்கியப் பயணம்

அமுதபாரதியின் இலக்கிய ஆர்வம் சிறு வயதிலேயே வெளிப்பட்டது. அவர் பள்ளி மாணவராக இருந்த காலத்திலேயே, 1952-ஆம் ஆண்டு அவரது முதல் கவிதை வெளியானது. பின்னர் இலக்கணத்தை முறையாகக் கற்று, மரபுக் கவிதையின் நுட்பங்களிலும் தேர்ச்சி பெற்றார். கவிதை மீது கொண்ட ஆழ்ந்த ஈடுபாடு அவரது இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்து வளரச் செய்தது.

## ஹைக்கூ கவிதையில் பங்களிப்பு

இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்?
************

ஒரு கணம்
கொக்கு சுமக்கும்
நிலா

### ஹைக்கூ கவிதையில் பங்களிப்பு

தமிழ் ஹைக்கூ கவிதை வளர்ச்சியில் அமுதபாரதியின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கிடைக்கக்கூடிய வாழ்க்கை வரலாற்றுத் தகவலின்படி, தமிழின் முதல் ஹைக்கூ நூலை எழுதியவர் என்ற சிறப்பைப் பெற்றவர் அமுதபாரதி. குறைந்த சொற்களில் ஆழமான சிந்தனையையும் இயற்கை உணர்வையும் வாழ்க்கை அனுபவத்தையும் வெளிப்படுத்தும் ஹைக்கூ வடிவத்தைத் தமிழில் அறிமுகப்படுத்தி வளர்த்தவர்களில் முக்கியமானவராகப் போற்றப்படுகிறார்.

### பன்முகக் கலைஞர்


அமுதபாரதி கவிதை உலகத்தோடு மட்டும் தம்மைச் சுருக்கிக் கொள்ளவில்லை. ஓவியத்திலும் ஆர்வம் கொண்டிருந்ததால் "ஓவியக் கவிஞர் அமுதோன்" என்றும் அறியப்பட்டார். எழுத்து, கவிதை, ஓவியம் மற்றும் இதழ் வடிவமைப்பு ஆகிய பல துறைகளில் அவர் தனது திறமையை வெளிப்படுத்தினார். கலைக்கும் இலக்கியத்திற்கும் இடையே அழகான இணைப்பை ஏற்படுத்திய பன்முகக் கலைஞராக அவர் விளங்கினார்.

### நூல்கள்:

- உதய காலங்கள் - 1982
- இணை தேடும் இதயம் - 1982
- மன்மத ராகங்கள் - 1983
- நிகழ்கால மேகங்கள் - 1983
- புள்ளிப் பூக்கள் (தமிழின் முதல் ஐக்கூ கவிதை நூல்) -1984
- ஐக்கூ அந்தாதி - 1989
- காற்றின் கைகள் - 1990
- ஐக்கூ அருவி - 1998
- நூறு நிலா - 1999
- ஐக்கூ விதைகள் - 2000
- சுரதா நூறு - 2009

கவிஞர் குமர. தர்மசீலன், இதழாசிரியர்

**விருதுகள்**




தமிழக அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது
ஓவியக் கவிஞர்
ஐக்கூ அன்னை
ஐக்கூ முதல்வர்
தமிழக அரசின் சிறந்த நூல் பரிசு - 1999,
சிங்கப்பூர் சங்கரி ராமானுஜம் பரிசு
கம்பன் கழகம் வழங்கிய வித்தகர் விருது
செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளை இலக்கிய விருது
இலக்கிய வீதி அன்னம் விருது
சிற்பி விருது
கவிஞர் காப்பீடுத் திட்டம்

உறவுகளை இழந்து தனிமையில் வசிக்கும் கவிஞர் அமுதபாரதியை கவிஞர் காப்பீடுத் திட்டத்தின் மூலம் தத்தெடுத்துக் கொள்வதாகவும், ஆயுள் முழுமைக்குமான அமுதபாரதியின் வாழ்நாள் செலவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் படைப்புக் குழுமம், ஆகஸ்ட் 2021-ல் அறிவித்தது

**முடிவுரை**

கவிதையை வெறும் சொற்களின் அலங்காரமாகக் கருதாமல், வாழ்க்கையின் உணர்வுகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் கலை வடிவமாகப் பயன்படுத்தியவர் அமுதபாரதி. குறிப்பாக தமிழ் ஹைக்கூ கவிதை வளர்ச்சியில் அவரது பங்களிப்பு மறக்க முடியாதது. மரபுக் கவிதை அறிவு, புதுமையான சிந்தனை, ஹைக்கூ முயற்சி மற்றும் ஓவியத் திறமை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்த அவரது ஆளுமை தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமானது.

கவிஞர் குமர. தர்மசீலன், இதழாசிரியர்

# நாளை நமதே

## பணிவை அணிந்திடும் மனிதன்
## இன்சொல்லால் என்றும்
## இதயங்களை வென்றிடுவான்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com